1971 டிசம்பர் 9]

பக்தர்களின் எண்ணிக்கை குறைந்திருக்கிறதா ? அப்படிக் குறைந்திருந்தால் நமது அறநிலையத்துறையின் மூலம், வருபவர் களின் எண்ணிக்கையைப் பெருக்க கவனம் செலுத்துவார்களா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : பக்தர்களின் எண்ணிக்கை குறையவில்லை. பெருகித்தான் இருக்கிறது. அம்மையார் அவர்களும் மேலும் பக்தர்களின் எண்ணிக்கை பெருக பிரார்த்தனை செய்து கொள்ளலாம். வெளிநாடுகளுக்கு அனுப்பப்பட்ட முடிகளின் தேவை குறைந்திருப்பதால் ஸ்டேட் டிரேடிங் கார்ப்பரேஷன் அவற்றை வாங்க இந்த ஆண்டு முன்வரவில்லை.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : தலைவர் அவர்களே, ஸ்டேட் டிரேடிங் கார்ப்பரேஷன் இந்தத் துறையிலே தலையிட்ட பிறகு தான் இம்மாதிரியான கஷ்டங்கள் ஏற்பட்டிருக்கின்றன. தனிப் பட்டவர்கள் மனிதமுடி ஏற்றுமதி செய்யும்போது மனித முடிக்கு ஒருசமயம் அயல்நாடுகளில் நல்ல கிராக்கி இருந்தது. அந்தக் கிராக்கியைக் கண்டு ஸ்டேட் டிரேடிங் கார்ப்பரேஷன் எடுத்துக் கொண்டது, இப்பொழுது மனித முடி பெருமளவில் தேங்கி, அங்குள்ள தொழிலாளர்களுக்குக் கஷ்டங்கள் ஏற்பட்டிருக் கின்றன. ஆகவே, அங்குள்ள மனித முடி விற்றாலும், விற்கா விட்டாலும் அங்குள்ள தொழிலாளர்களுக்குப் போனஸ் கொடுக்க வேண்டுமென்கிற ஏற்பாட்டைச் செய்ய அரசாங்கம் வழிவகை செய்யுமா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, மனித முடியை அவர்கள் எடுத்துக்கொள்ளாத காரணத்தால் பெருமள வில் தேங்கிக் கிடக்கிறது. இதை ஏலத்தில் விட வேண்டுமென்று கருதி, கடந்த ஆண்டில் நடவடிக்கை எடுத்தபோது, மிகக் குறை வான அளவிற்கு ஏலம் போனது; சரியான அளவில் ஏலம் கோராத தால் தேங்கிக் கிடக்கிறது. இதற்கிடையில் அங்குள்ள தொழி லாளிகளில் ஒரு பகுதியினர் தாங்களே அதை எடுத்துக்கொள்ள வேண்டுமென்பதற்காக ஒரு சங்கம் அமைத்திருப்பதாகவும் அரசாங்கத்திற்கு ஒரு மனுவைக் கொடுத்திருக்கிறார்கள். அரசாங்கம் அந்த மனுவைப் பரிசீலித்து வருகிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினுக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) வெள்ளிக்குறி இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

THIRU K. SUPPU : On a point of personal explanation, Sir நான் நேற்றைய தினம் ஓர் ஒற்றிவைப்புத் தீர்மானம். . .

THE HON. THIRU K. ANBAZHAGAN : If any hon. Member wants to give any explanation to this House, even personal explanation, he should have it in writing and send it to the Hon. Speaker first. After approval only, the hon. Member may give his explanation and especially for what happened yesterday.

THIRU K. SUPPU : With the permission of the Deputy Speaker, I would like to make a personal explanation.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : எதைப்பற்றி நீங்கள் கேட்கப் போகிறீர்கள் என்று எனக்குத் தெரியாது. நீங்கள் முதலில் 'எதைப்பற்றி பர்சனல் எக்ஸ்ப்ளனேஷன்' என்று எழுத்து மூலமாக எழுதிக் கொடுங்கள். அதை நான் பார்த்து. அதற்கு அனுமதி அளித்தபிறகு நீங்கள் விளக்கம் கேட்கலாம்.

THE HON. THIRU K. ANBAZHAGAN : Not even that. The whole explanation should be in writing and after approval of Speaker only the hon. Member may explain it to the House.

(2) கவன ஈர்ப்பு

சென்னையில் காலரா நோயும் தடுப்பு நடவடிக்கைகளும்.

DR. H. V. HANDE : Sir, I call the attention of the Hon. Minister for Public Health, to a matter of urgent public importance, namely, the incidence of a number of cases of cholera in the City of Madras and the need to take immediate and effective steps to undertake mass inoculation.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காலரா நோயால் பாதிக்கப்பட்டதாக அறிவிக்கப் பட்டவர்களின் எண்ணிக்கை அண்மையில் திடீரென உயர்ந்தது. மாநகரின் பற்பல பகுதிகளில் இந்நோய் பரவியிருந்தது. வட கிழக்குப் பருவ மழையின் தொடக்க நாட்களில் பெய்த பெரு மழைக்குப் பின்னர் சென்னை மாநகரில் தாழ்வாக அமைந்துள்ள பகுதிகளில் நீர் தேங்கியது. நீர் வழங்கு முதன்மைக் குழாய்களில் தரை மட்டத்துக்குக்கீழ் குழிப் பகுதிகளில் பொருத்தப்பட்டுள்ள குழாய்கள் வாயிலாகவும், கசிவுகள் வாயிலாகவும் குடிநீரின் தூய்மை சில இடங்களில் கெட்டுவிட்டது. இவை காலரா நோயினால் பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை திடீரென உயர்ந்ததற்கு ஓரளவு காரணமாகும்.

காலரா நோய்த் தடுப்பிற்காக திறமையான முறையில் கட்டுப் பாட்டு நடவடிக்கைகள் உடனடியாகச் சென்னை மாநகராட்சியால் மேற்கொள்ளப்பட்டன. தொற்று நோய்க் கிருமிகளால் பாதிக்கப் பட்ட இடங்களில் தொற்றுநோய்க் கிருமிகளை ஒழிக்கும் மருந்து தெளித்தல், வழங்கப்படும் குடிநீரில் கூடுதலாக குளோரின் கலத்தல், கிணறுகளில் குளோரின் கலத்தல், ஈ, கொசுக்களை ஒழிக்கும் மருந்துகளை மும்முரமாகத் தெளிக்கும் நடவடிக்கைகள் எடுத்தல், காலரா தடுப்பு ஊசிகளை குறிப்பாக, காலரா தோன்றிப் பரவக்கூடிய நிலை உள்ள இடங்களில் அதிக அளவில் குத்துதல், ஆகிய உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

பாதிக்கப்பட்ட பகுதிகளின், பல இடங்களில், நீர்வழங்கு முதன்மை குழாய்களில் தொற்றுநோய்க் கிருமி நீக்கம் செய்யும் பொருட்டு, வட்டார நீர்வழங்கு முதன்மைக் குழாய்களுக்குள்